சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்: 20.11.2024

PW1: சண்முகப்பிரியா க/பெ– கோமதி குமார்

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

நான் 9ம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு எழுதப்படிக்க தெரியும். எனது தகப்பனாருக்கு எரிச்சநத்தம் பூர்வீகம் இல்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் பூர்வீகம் திருநெல்வேலி மாவட்டம், கழுகுமலை என்றால் சரிதான். எனது தகப்பனாரின் தாயாருக்கு பூர்வீகம் எரிச்சநத்தம் என்றால் சரிதான். எரிச்சநத்தத்தில் உள்ள சொத்துக்கள் அனைத்தும் எனது பாட்டி மகமாயி பெயரில் உள்ளது என்றால் சரிதான். எனது பாட்டிக்கு 4 ஆண் வாரிசுகள் மற்றும் 3 பெண் வாரிசுகள். எனது பாட்டி இறப்பிற்கு பின்னர் தான் 4 ஆண் வாரிசுகளும் சேர்ந்து எனது தகப்பனாருக்கு 1/7 பங்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அதை எனது தகப்பனார் 5ம் பிரதிவாதி ஆறுமுகத்திற்கு தானமாக எழுதிக்கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். அந்த சொத்துக்களை எனது தகப்பனார் 2001ல் ஒரு பகுதியும், 2009ல் ஒரு பகுதியும் கிரையம் வாங்கினார். 5ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த சொத்தைதான் 5ம் பிரதிவாதி ஆறுமுகம் எனக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். என் தகப்பனார் வாங்கிய கிரைய பத்திரம் மற்றும் அவர் ஆறுமுகத்திற்கு எழுதிக்கொடுத்த தானபத்திரம் ஆகிய மூலபத்திரங்கள் இல்லாமல் தான் நான் தான பத்திரம் எழுதி வாங்கினேன். மகாமாயின் ஆண் வாரிசுகளிடம் என் தகப்பனார் தனிப்பட்ட முறையில் கிரையம் பெற்றுள்ளார் என்றால் எனக்கு தெரியாது.

என் தகப்பனாருக்கு தனிப்பட்ட சொத்தாக இருப்பதினால் தான் நான் தானம் பெற்றேன் என்றால் சரிதான், அந்த சொத்துக்களை இந்த வழக்கில் சேர்க்கவில்லை. தானசெட்டில்மெண்ட் வாங்கிய சொத்தில் நான் குடியிருப்பதால் அதை நான் சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனக்கு அந்நியத்தில் தான் திருமணம் முடித்தார்கள். எனது திருமணத்திற்கு 25 பவுன் தங்க நகைகள் போட்டார்கள். எனக்கு திருமணம் ஆனவுடன் நான் மதுரைக்கு தனிக்குடித்தனம் சென்றுவிட்டேன் என்றால் சரிதான். நான் தனிக்குடித்தனம் சென்ற பிறகு 2ம் பிரதிவாதி அருணகிரி தான் மாதந்தோறும் வீட்டு செலவிற்கு எனக்கு பணம் கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் தொழில் செய்வதற்காக நான் ரொக்கமாக ரூ.10 லட்சம் 2ம் பிரதிவாதியிடம் வாங்கினேன் என்றால் நான் வாங்கவில்லை. சரவணா டிப்பன் சென்டர் மகாமாயி அம்மாள் சொத்தில் தான் இருக்கிறது என்று சொன்னால் சரிதான். அந்த டிப்பன் சென்டரை மகாமாயி அம்மாள் உயிருடன் இருக்கும் வரை அவர் தான் நடத்தி வந்தார் என்றால் சரிதான். நான் பிறப்பதற்கு முன்பிருந்தே டிப்பன் சென்டர் உள்ளது என்றால் சரிதான். எரிச்சநத்தம் கிராமத்தில் எனது தாத்தா அப்பர்சாமி பிள்ளை பெயரில் சொத்துக்கள் இல்லை என்றால் சரிதான். நான் தற்போது எரிச்சநத்தில் என் கணவருடன் குடியிருந்து வருகிறேன். தாவா சொத்தில் 1ம் அயிட்ட சொத்தை கிரையம் பெறும் போது எனது வயது 7 என்றால் சரிதான். பிராது 2ம் அயிட்ட சொத்தினை கிரையம் பெறும் போது எனது வயது 12 என்றால் சரிதான். பிராது 3ம் அயிட்ட சொத்தினை கிரையம் பெறும் போது எனது வயது 9 என்றால் சரிதான். எனது அண்ணன் 5ம் பிரதிவாதி ஆறுமுகம் 1989ல் பிறந்தார். அருணகிரி 1987ல் பிறந்தார். அப்பர்சாமி 1981ல் பிறந்தார். எனது சகோதரி அருணாதேவி 1985ல்

பிறந்தார். 1 முதல் 3 அயிட்ட தாவா சொத்துக்களை எனது தகப்பனார் சுயமாக கிரையம் பெற்ற சொத்துக்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் அனைத்தும் எனது தகப்பனாரின் சுய சொத்துக்கள் என்றும், கூட்டுக்குடும்ப சொத்துக்கள் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. எங்களுக்கு கொடுத்தது போல் 2ம் பிரதிவாதிக்கும் தானமாக கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதிக்கு தானசெட்டில்மெண்ட் கொடுத்த விபரம் எனக்கு 2015லிலேயே தெரியும் என்றால் சரியல்ல, வழக்கு தாக்கல் செய்யும் போது தான் தெரியும். 1 முதல் 3 அயிட்ட சொத்துக்கள் எனது தகப்பனார் சுய சம்பாத்திய சொத்துக்கள் என்றும், அதில் எனக்கு எந்த பாகமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் குடியிருக்கும் வீட்டிற்கு மின் இணைப்பு மகாமாயி பெயரில் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் தற்போது காட்டப்படுவது என் வீட்டிற்கான மின் கட்டண ரசீது தான். அவை **பி.வா.சா.ஆ.1** (பில்கள்-2) ஆகும். எனது தகப்பனார் 1/7 பங்கு கிரையம் பெற்றதால் தான் மின் இணைப்பை இன்னும் என் பெயருக்கு மாற்றவில்லை என்று சொன்னால் சரிதான். எனது தகப்பனார் உடன் பிறந்த சகோதரர்கள் எரிச்சநத்தம் கிராமத்தில் தான் இருந்தார்கள் என்றால் சரிதான், அதில் இருவர் இறந்துவிட்டனர். அவர்கள் எரிச்சநத்தில் இருந்த போது பெட்டிக்கடை வைத்திருந்தார்கள். 2ம் பிரதிவாதி ஜவுளிக்கடை நடத்தினார் என்றால் இல்லை. 2ம் பிரதிவாதி தனியாக ஒத்திக்கு தோட்டம் வாங்கி விவசாயம் செய்தார் என்றால் செய்யவில்லை. எனது சித்தப்பா சுப்பிரமணி, பன்னீர் செல்வம், திருநாவுக்கரசு ஆகியோர்கள் சேர்ந்து டிப்பன் கடை நடத்தி வந்தார்கள் என்றால் சரிதான். அதில் வெத்தலை பாக்கு கடை இருந்தது என்றால் சரிதான். அந்த வெத்தலை பாக்குக்கடையை எனது சித்தப்பா 2ம்

பிரதிவாதி அருணகிரிக்கு கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி சுயமாக சம்பாத்திய சொத்தை தான் பிராது 4, 5 லக்க சொத்துக்களாக காட்டியுள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி கிரையம் ஏற்கனவே எனது சகோதரர்களுக்கு தெரியுமா என்று எனக்கு தெரியாது. மகாமாயி பெயரில் தான் டிப்பன் கடைக்கு தீர்வை ரசீது இருந்தது என்றால் சரிதான். மகாமாயி அம்மாள் காலத்திற்கு பின்னர் தான் எனது தகப்பனார் பெயருக்கு மாறியது. சரவணா டிப்பன் சென்டரில் உள்ள பாத்திரங்களில் மகாமாயி அம்மாள் பெயர் தான் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஹோட்டலில் உள்ள டீபாய்லரில் மகாமாயி அம்மாள் பெயர் உள்ளது என்றால் நான் பார்த்ததில்லை. பாத்திரங்கள் சம்மந்தமாக காவல்நிலையத்தில் என் அப்பா புகார் செய்தார் என்றால் சரிதான். சரவணா டிப்பன் சென்டர் எத்தனை செண்டில் உள்ளது என்று எனக்கு தெரியாது. சரவணா டிப்பன் செண்டருக்கு 4 கதவு எண்கள் உள்ளது என்றால் சரிதான். அவை 2/93, 2/77, 2/78, 2/94 ஆகும். இந்த சொத்திலிருந்து எனது தகப்பனாரை விரட்டி விட்டு நான் குடியிருக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் என் தகப்பனார் காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. அப்பர்சாமி 2012லிலேயே வீட்டை விட்டு தனியாக சென்றுவிட்டார். 4ம் பிரதிவாதிக்கு திருமணமாகி விட்டது என்றால் சரிதான். 5ம் பிரதிவாதி ஆறுமுகம் ஏற்கனவே இருந்த தான செட்டில்மெண்ட் சொத்தில் இருந்தார், தற்போது வெளியேறி விட்டார் என்றும் சொன்னால் சரிதான். எனது பாட்டி இறந்த பின்னர் எனது தகப்பனார் உடன் பிறந்தவர்களுக்கும் சொத்தில் பங்கு உள்ளது என்றால் சரிதான், என் சித்தப்பாக்கள் 3 பேர்கள் மட்டும் என் தகப்பனாருக்கு அவர்கள் பங்கை கொடுத்துவிட்டார்கள் என்று சொன்னால் என்

சித்தப்பாக்கள் அனைவரும் கொடுத்துவிட்டார்கள், அதில் யார் கையெழுத்து போட்டார்கள் என்று தெரியாது. அதில் 1/7 பங்கு தான் நானும், ஆறுமுகமும் தானம் பெற்றுள்ளோம் என்றால் சரிதான். பிராதில் மகாமாயி அம்மாள் வாரிசுகளை தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றும், எனது தகப்பனாருக்கு தனிப்பட்ட சொத்து என்றும், அதனால் எனக்கு பங்கு பாத்தியம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது சகோதரர் 2 ம் பிரதிவாதி 4, 5 அயிட்ட சொத்துக்கள் தனிப்பட்ட சொத்துக்கள் என்றும், அதனால் எனக்கு பங்கு பாத்தியம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனக்கு 2015 லிலேயே அருணகிரிக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிகொடுத்த விபரம் தெரியும் என்றும், வழக்கிற்காக அதை மறைக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. 2 ம் பிரதிவாதி 2012, 2013 லிலேயே கிரையம் பெற்ற விபரம் எனக்கு தெரியும் என்றும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. அதனால் நான் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நானும், 5 ம் பிரதிவாதியும் சேர்ந்து தான் வழக்கு நடத்தி வருகிறோம் என்று சொன்னால் சரிதான்.